மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# முதுரையில் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாடு

# The use of Kutriyalugaram grammar in Muuthurai

Kogila Sriraman / கோகிலா ஸ்ரீராமன்[1]
Muniisvaran Kumar / முனிஸ்வரன் குமார்[2]

[1]Postgraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia
[2]Senior Lecturer, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia

Date of Submission: 23-06-2025
Date of Acceptance: 30-10-2025
Date of Publication: 20-12-2025
Corresponding Author's Email: muniisvaran@fbk.upsi.edu.my

**ஆய்வுக் சுருக்கம்**

மூதுரை, ஔவையார் இயற்றிய ஒரு தமிழ் நீதி நூல் ஆகும். இந்நூலில் 30 வெண்பாப் பாடல்கள் அமைந்துள்ளன. ஔவையார் மூதுரையில் கல்வி, நட்பு, உதவி போன்ற வாழ்வியல் சிந்தனைகளைக் குழந்தைகளுக்காகப் பாடினாலும் பெரியவர்களுக்கும் பயன்படக்கூடியவையாக உள்ளன எனலாம். இந்த ஆய்வின் நோக்கமானது இந்நூலில் உள்ள வெண்பாப் பாடல்களில் குற்றியலுகர இலக்கணத்தைக் கண்டறிவது ஆகும். இஃது ஒரு பண்புசார் ஆய்வாகும். மூதுரையில் இடம்பெற்றுள்ள வெண்பாப் பாடல்களில் குற்றியலுகரத்தின் பயன்பாட்டினைக் கண்டறிவது இவ்வாய்வின் கண்டுபிடிப்பாக அமைகிறது. இந்நூலில் உள்ள 30 வெண்பாப் பாடல்களும் இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

**கருச்சொற்கள்**: மூதுரை, குற்றியலுகரம்

**Abstract**

Moothurai is a Tamil book of proverbs written by Avvaiyar. This book consists of 30 Venba poems. Although Moothurai primarily conveys life values related to education, friendship, and helping others which are especially for children. It is also relevant and beneficial for adults. The purpose of this study is to identify and analyze the use of kuṟṟiyalukaram grammar in the Venba poems found in this book. This research adopts a qualitative approach. The main finding of the study is the identification of kuṟṟiyalukaram usage in the Venba poems of Moothurai. All 30 Venba poems included in the text were analyzed as part of this study.

**Key words:** Muuthurai, Kutriyalugaram

**முன்னுரை**

**இலக்கியம் – மூதுரை**

பெண்பாற் புலவர் ஔவையாரால் வழங்கப்பட்ட நீதி நெறி நூல்களுள் ஒன்று மூதுரை. 12ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகும். பழமையான அறக்கருத்துகளைக் கொண்டிருப்பதால் இது மூதுரை (மூப்பு + உரை) என அழைக்கப்படுகிறது. இதற்கு வாக்குண்டாம் என்ற இன்னொரு பெயரும் உண்டு. இதன் கடவுள் வாழ்த்துப் பாடல் “வாக்குண்டாம்” என்று வழங்கப்படுவதால் இப்பெயர் ஏற்பட்டது. இந்நூலில் 30 வெண்பாப்பாடல்கள் அமைந்துள்ளன. நான்கு வரிகள் கொண்ட ஒவ்வொரு பாடலும் ஒரு தனிக்கருத்தை வலியுறுத்துகிறது. தொல்காப்பிய உரையாசிரியர்களில் ஒருவரான நச்சினார்க்கினியரால் மூதுரை எடுத்துக்காட்டியிருப்பது இந்நூலின் பெருமைக்குச் சான்றாகும். அவ்வகையில் **‘அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது’** எனும் ஔவையாரின் வாக்குபடி, அரிதாகக் கிடைக்கப் பெற்ற மானிடப் பிறவியைப் பண்பட்டதாக வாழ வாழ்வியல் சிந்தனைகள் வளமானவையாக இருக்க மூதுரை பெரும் பங்காற்றுகிறது. இவ்வகையில் மூதுரை என்ற சொல்லுக்கு, வாழ்வியற் களஞ்சியம் என்றும் மக்களை நெறிபிறழா வகையில் நடத்திச் செல்வது என்றும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. சுருங்கக்கூறின், அரிய கருத்துகளை, எளிய நடையில் தெளிய உரைத்து நம் அனைவரையும் நல்வழியில் நடந்து, நன்னெறியில் நின்று நல்வாழ்வை எடுத்துரைக்கும் நூலாக மூதுரை அமைகிறது.

**இலக்கணம் – குற்றியலுகரம்**

குற்றியலுகரம் என்பது குறைந்தொலிக்கும் உகரமாகும். உதாரணமாக, குழந்தை, வகுப்பு, பாக்கு ஆகிய சொற்களைக் குறிப்பதாகும். மூன்று சொற்களிலும் ‘கு’ என்னும் எழுத்தை உச்சரிப்பதில் வேறுபாடு இருப்பதை உணரலாம். அவ்வெழுத்துச் சொல்லின் முதலிலும் இடையிலும் வரும்பொழுது முழுமையாக ஒலிக்கிறது. சொல்லின் இறுதியில் வரும்பொழுது அரை மாத்திரை அளவே ஒலிக்கிறது. கு, சு, டு, து, பு, று ஆகிய ஆறு வல்லின உகரங்களும் சொல்லின் இறுதியில் வரும்போது, அரை மாத்திரை அளவே ஒலிக்கும். இவ்வாறு தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும்.

இதனையே வேறு விதத்தில் ஒலிக்கும்போது, தனி நெடிலுடனோ, பல எழுத்துகளைத் தொடர்ந்தோ சொல்லுக்கு இறுதியில் வல்லின மெய்யோடு சேர்ந்து வரும் உகரம் எனும் உயிரொலி அரை மாத்திரையளவே ஒலிக்கும்.

**குற்றியலுகரம் = குறுமை + இயல் + உகரம்**
**(குறுகிய ஓசையுடைய உகரம்)**

எ.கா:

காடு என்னும் தமிழ்ச் சொல்லில், கடைசியில் வரும் டு என்னும் எழுத்து (உகரம் ஏறிய ட் என்னும் வல்லின எழுத்து), தன் இயல்பான ஒரு மாத்திரை அளவு நீட்டிக்காமல், அரை மாத்திரை அளவே ஒலிக்கும். இதில் தனி நெடிலுடன், வல்லின மெய்யோடு (ட்) சேர்ந்த உகரம் (டு) வந்துள்ளதைப் பார்க்கலாம். இவ்வுகரம் அரை மாத்திரையளவே ஒலிப்பதைக் காணலாம்.

இதே போலப் பருப்பு, சிறப்பு, நேற்று, வேட்டு, பேச்சு, கொடுக்கு, மத்துப் போன்றசொற்களில் கடைசியில் வரும் உகரம் ஏறிய வல்லின மெய்கள் குற்றியலுகரம் ஆகும். மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில், குறைந்து ஒலிக்கும் உகரமே குற்றியலுகரம்.

எனவே, ஈற்றுக்கு முன் உள்ள எழுத்தைக் கொண்டு குற்றியலுகரத்தை வகைப்படுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| எ.கா : | ப | [redacted] |
| | ட் | ஈற்றுக்கு அயல் எழுத்து – ட்– வல்லினம்<br>(ஆகவே வன்தொடர் குற்றியலுகரம்) |
| **பட்டு** | டு | கு/சு/டு/து/பு/று – வில் உள்ளது<br>(ஆகவே குற்றியலுகரம்) |

குறிப்பு: தனி குற்றெழுத்தை அடுத்து கு/சு/டு/து/பு/று வந்தால் அது முற்றியலுகரமாகும்.

**குற்றியலுகரத்தின் வகைகள்**

குற்றியலுகரம் ஆறு வகைப்படும். அவை

- ❖ வன்றொடர்
- ❖ மென்றொடர்
- ❖ இடைத்தொடர்
- ❖ உயிர்த்தொடர்
- ❖ ஆய்தத்தொடர்
- ❖ நெடிற்றொடர்

**நெடிற்றொடர்க் குற்றியலுகரம்**

இதில் தனிநெடில் எழுத்துகளை அடுத்து உகரம் வரும்.

எ.டு:- ‘நா’கு, ‘கா’சு, ‘மா’டு, ‘மா’து, ‘பே’று, த்’ரா’சு

**ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்**

‘ஃ’ – எனும் ஆய்த எழுத்தை அடுத்து உகரம் ஆகும்.

அஃது, இஃது, எஃது, கஃசு, எஃகு போன்ற சொற்கள் வரும். இவற்றோடு வருமொழி முதலில் உயிரெழுத்து வரும்போது குற்றியலுகரம் உண்டாகும்.

**உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்**

இதில் உயிரெழுத்துகளை அடுத்து உகரம் வரும்.

எடுத்துக்காட்டு : அரசு, மிளகு, வரகு, அடகு போன்றவை.

உதாரணமாக, அரசு என்ற நிலைமொழியின் ஈற்றில் எழுத்து ர்+அ என்பதில் ‘அ’ என்னும் உயிரெழுத்தை அடுத்து ‘சு’ என்ற உகரம் வந்ததால் உயிர்த் தொடர் உகரம் ஆயிற்று.

**வன்றொடர்க் குற்றியலுகரம்**

இதில் வல்லின எழுத்துகளை அடுத்து உகரம் வரும்.

எடுத்துக்காட்டு : சுக்கு, அச்சு, பட்டு, கழுத்து, உப்பு, கசப்பு.

இங்கே நிலைமொழியின் ஈற்றில் எழுத்து ‘ட்’ என்ற வல்லின எழுத்தைத் தொடர்ந்து ‘டு’ என்ற உகர எழுத்து வந்ததால் வன்றொடர்க் குற்றியலுகரம் ஆயிற்று.

**மென்றொடர்க் குற்றியலுகரம்**

இதில் மெல்லின எழுத்துகளை அடுத்து உகரம் வரும்.

எடுத்துக்காட்டு : சங்கு, பஞ்சு, நண்டு, பந்து, கம்பு, கன்று.

இங்கே ‘ங்’ என்கிற மெல்லின எழுத்தை அடுத்து ‘கு’ என்ற உகரம் வந்ததால் மென்றொடர்க் குற்றியலுகரம் ஆயிற்று.

**இடைத்தொடர்க் குற்றியலுகரம்**

இதில் இடையின எழுத்துகளை அடுத்து உகரம் வரும்.

எடுத்துக்காட்டு : பெய்து, கொய்து, மல்கு, புல்கு, எள்கு, மாழ்கு

இங்கே நிலைமொழியில் 'ய்' என்ற இடையின எழுத்தை அடுத்து 'து' என்ற உகரம் வந்ததாலும் அஃது இடைத்தொடர்க் குற்றியலுகரம் ஆயிற்று.

கீழ்க்கண்ட அட்டவணையில் குற்றெழுத்துச் சொற்கள் குற்றியலுகரத்தின் வகைகளுக்கு ஏற்ப பிரித்துக் காட்டப்பட்டுள்ளன.

| கு | சு | டு | து | பு | று | குற்றியலுகரம் வகைகள் |
|---|---|---|---|---|---|---|
| முறுக்கு | அச்சு | பட்டு | எழுத்து | உப்பு | பற்று | வன்றொடர் |
| சங்கு | பாகு | வண்டு | பந்து | அம்பு | ஒன்று | மென்றொடர் |
| மல்கு | | | போழ்த்து | சால்பு | | இடைத்தொடர் |
| பழகு | வல்லரசு | குருடு | விழுது | மரபு | கயிறு | உயிர்த்தொடர் |
| எஃகு | கஃசு | | அஃது | | | ஆயுதத்தொடர் |
| பாகு | பேசு | நாடு | ஏது | | ஆறு | நெடிற்றொடர் |

இந்த ஆய்வில், தமிழ் நீதி நூல்களுள் ஒன்றான ஔவையார் இயற்றிய மூதுரையில் காணப்படும் குற்றியலுகரச் சொற்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

### ஆய்வு நோக்கம்

ஔவையார் இயற்றிய நீதிநெறி நூல்களில் ஒன்றான மூதுரையில் இடம்பெற்றுள்ள 30 வெண்பாப் பாடல்களில் பயன்படுத்தப்பட்ட குற்றியலுகர இலக்கணப் பயன்பாட்டை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

### ஆய்வின் வரையறை

இந்த ஆய்வின் நோக்கமானது, மூதுரையில் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாட்டை அடையாளம் காண்பதே ஆகும். இந்த ஆய்வில் ஆய்வாளர் பத்து வெண்பாப் பாடல்களைக் குறிப்பிட்டு அவற்றில் காணப்படும் குற்றியலுகரச் சொற்களை ஆய்வு செய்துள்ளார். ஆய்வாளர் பாடல் 1 முதல் பாடல் 30 வரையிலான வெண்பாப் பாடல்களைப் பட்டியலிட்டு, அவற்றில் உள்ள வரிகளில் குற்றியலுகரச் சொற்களின் வகைகளைக் கண்டறிந்து விளக்கியுள்ளார்.

### ஆய்வின் மீள்நோக்கு

மூதுரையில் குற்றியலுகரம் இலக்கணத்தின் பயன்பாடு- ஓர் ஆய்வு எனும் தலைப்பில் ஆய்வுகள் இதற்கு முன்பு மேற்கொள்ளப்படவில்லை (சுப்பிரமணியம், 2025). 'பெண் கல்வி: உவமை பொருத்தமின்மையில் மூதுரை ஔவையார் (கி.பி. 12)' என்கிற ஆய்வில், அறிவுடையார் கல்வி, கல்லாதவர் கல்வி எனும் இருநிலைகளைக் குறிப்பிடும் மூதுரையில் 14-ஆம் பாடலில் உவமையை மையமாக வைத்து ஆய்வினை மேற்கொண்டுள்ளார். தொடர்ந்து, (சாஸ்திரிகள், 2022), மூதுரையும் கதைக்குறிப்பும் என்கிற ஆய்வில் மூதுரைப் பாடல்களின் அறநெறிகள் காட்டும் ஒழுக்க நெறிகள், அறம், பண்பு, கருணை, நேர்மை போன்ற கருப்பொருள்களை முதன்மையாக வைத்து ஆராய்ந்துள்ளார். மேற்குறிப்பிட்ட ஆய்வுகள் பொதுவாக, மூதுரை கல்வி, நட்பு, உதவி போன்ற மனிதனின் நல்வாழ்விற்குக் களஞ்சியமான அறக்கருத்துகளை விளக்குவதாக அமைந்துள்ளது. ஆய்வாளரின் ஆய்வு, மூதுரையில் காணப்படும் குற்றியலுகர இலக்கணத்தை குறித்து ஆராய்ந்துள்ளதால், இவ்வாய்வு முன்னாய்வுவோடு வேறுபடுகிறது.

### ஆய்வின் அணுகுமுறை

மூதுரையில் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாட்டினை ஆராய்வதால், இஃது ஒரு பண்புசார் ஆய்வாக அமைகிறது. இது பகுப்பாய்வு விளக்க முறையில் இருப்பதாலும், இதை விளக்கமுறை ஆய்வாகவும் கொள்ளலாம். இந்த ஆய்வில் இரண்டு வகையான பண்புசார் அணுகுமுறைகள்

பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாவதாக, நூலகப் பகுப்பாய்வு முறையானது மூதுரை எனும் நீதி நூலிலுள்ள வெண்பா பாடல்களில் குற்றியலுகரச் சொற்களை ஆராய்வதால், இதில் நூல் பகுப்பாய்வு முறை கையாளப்பட்டுள்ளது. இரண்டாவதாக, மூதுரையில் இடம்பெற்றுள்ள வெண்பா பாடல்களை ஆழமாக ஆய்வதன்வழி உள்ளடக்க பகுப்பாய்வு முறையும் மெற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு, ஆய்வாளர் நூல்கள், ஆய்வேடுகள், ஆய்வுக் கட்டுரைகள், இணைய பதிவுகள் முதலானவற்றைத் தரவுக்கான மூலங்களாகப் பயன்படுத்தியுள்ளார். அவற்றின் கண்டுபிடிப்புகளை மையமாக வைத்து மூதுரையில் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாட்டினைக் கண்டறிந்துள்ளார்.

**ஆய்வு கண்டுபிடிப்பும் கலந்துரையாடலும்**

**வன்றொடர்க்குற்றியலுகரம்.**

வெண்பா : 1

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி

வெண்பா 1-இல் முதல் வரியில் ஒருவர்க்குச் எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து ‘க்’ என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து ‘கு’ என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் வன்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 2

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்

வெண்பா 2 -இல் முதல் வரியில் ஒருவர்க்குச் எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து ‘க்’ என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து ‘கு’ என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் வன்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 2

கல்மேல் எழுத்துப்போல் காணுமே – அல்லாத

வெண்பா 2 -இல் இரண்டாவது வரியில் எழுத்து எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து ‘த்’ என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து ‘து’ என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் வன்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 5

அடுத்து முயன்றாலும் ஆகும்நாள் அன்றி

வெண்பா 5 -இல் முதல் வரியில் அடுத்து எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து ‘த்’ என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து ‘து’ என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் வன்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 7

தவத்து அளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்

குலத்து அளவே ஆகும் குணம்

வெண்பா 5 -இல் மூன்றாவது வரியில் தவத்து எனும் ஈற்றுக்கும் நான்காவது வரியில் குலத்து எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து ‘த்’ என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து ‘து’ என்ற உகரம்

வருகிறது. எனவே, இச்சொற்களை வன்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 10

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்

நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு

வெண்பா 10 -இல் முதல் வரியில் நெல்லுக்கு எனும் ஈற்றுக்கும் மூன்றாவது வரியில் பொருட்டு எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து 'க்' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'கு' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொற்கள் வன்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 13

நீட்டு ஓலை வாசியா நின்றான் குறிப்பு அறிய

வெண்பா 13 -இல் மூன்றாவது வரியில் நீட்டு எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ட்' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'டு' என்ற உகரம் வருகிறது. அதே வரியில் குறிப்பு எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ப்' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'பு' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொற்கள் வன்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 14

தானும் அதுவாக பாவித்துத் - தானும் தன்

பொல்லாச் சிறகை விரித்து ஆடினாற் போலும்

வெண்பா 14 -இல் இரண்டாவது வரியில் பாவித்து எனும் ஈற்றுக்கும் மூன்றாவது வரியில் விரித்து எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'த்' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொற்கள் வன்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 16

வாடி இருக்குமாம் கொக்கு

வெண்பா 16 -இல் நான்காவது வரியில் கொக்கு எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து 'க்' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'கு' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் வன்றொடர்க் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 18

சீரியர் கெட்டாலும் சீரியரே, சீரியர் மற்று

வெண்பா 18 -இல் முதல் வரியில் மற்று எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து 'ற்' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'று' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் வன்றொடர்க்குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 21

இல்லாள் அகத்து இருக்க இல்லாதது ஒன்று இல்லை

வெண்பா 21 -இல் முதல் வரியில் அகத்து எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து 'த்' என்ற வல்லின

மெய்யெழுத்தைத் தொடர்ந்து ‘து’ என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் வன்றொடர்க் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 22

கற்பகத்தைச் சேர்ந்தார்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்

வெண்பா 22 -இல் முதல் வரியில் சேர்ந்தார்க்கு எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து ‘க்’ என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து ‘கு’ என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் வன்றொடர்க் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 23

கற்பிளவோடு ஒப்பர் கயவர்; கடும் சினத்துப்

பொற் பிளவோடு ஒப்பாரும் போல்வாரே – வில்பிடித்து

வெண்பா 23 -இல் முதல் வரியில் சினத்து எனும் ஈற்றுக்கும் இரண்டாவது வரியில் பிடித்து எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து ‘த்’ என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து ‘து’ என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொற்கள் வன்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 26

மன்னனில் கற்றோன் சிறப்புடையன் – மன்னர்க்குத்

தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோற்குச்

சென்றஇடம் எல்லாம் சிறப்பு.

வெண்பா 26 -இல் இரண்டாவது வரியில் மன்னர்க்குத் எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து ‘க்’எனும், மூன்றாவது வரியில் கற்றோற்குச் எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து ‘ற்’ எனும் வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து ‘கு’ என்ற உகரம் வருகிறது.நான்காவது வரியில் சிறப்பு எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து ‘ப்’ என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து ‘பு’ என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொற்கள் வன்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 27

கல்லாத மாந்தர்க்குக் கற்று உணர்ந்தார் சொல் கூற்றம்
அல்லாத மாந்தர்க்கு அறம் கூற்றம் - மெல்லிய
வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம் கூற்றமே
இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண்

வெண்பா 27 -இல் முதல் வரியில் மாந்தர்க்குக் எனும் ஈற்றுக்கும், மூன்றாவது வரியில் வாழைக்குத் எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து ‘க்’ என்றும், நான்காவது வரியில் இல்லிற்கு எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து ‘ற்’ என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து ‘கு’ என்ற உகரம் வருகிறது.மேலும்,முதல் வரியில் கற்று எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து ‘ற்’ என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து ‘று’ என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொற்கள் வன்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 28

மனம்சிறியர் ஆவரோ மற்று.

வெண்பா 28 -இல் நான்காவது வரியில் மற்று எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து 'ற்' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'று' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் வன்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

**மென்றொடர்க் குற்றியலுகரம்**

வெண்பா : 1

'என்று தருங்கொல்?' எனவேண்டாம் - நின்று

தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்

வெண்பா 1-இல் மூன்றாவது வரியில் என்று எனும் ஈற்றுக்கும்,நின்று எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ன்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'று' என்ற உகரம் வருகிறது.மேலும்,மூன்றாவது வரியில் வளர்தெங்கு எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ங்' எனும் மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'கு' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொற்களை மென்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 4

கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு

வெண்பா 4 -இல் மூன்றாவது வரியில் சங்கு எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து 'ங்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'கு' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் மென்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 6

பிளந்து இறுவது அல்லால் பெரும்பாரம் தாங்கின்

தளர்ந்து வளையுமோ தான்

வெண்பா 6-இல் மூன்றாவது வரியில் பிளந்து எனும் ஈற்றுக்கும், நான்காவது வரியில் தளர்ந்து எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ந்' எனும் மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொற்களை மென்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 11

பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்

விண்டு உமி போனால் முளையாதாம் கொண்ட பேர்

வெண்பா 11 -இல் முதல் வரியில் பண்டு எனும் ஈற்றுக்கும், இரண்டாவது வரியில் விண்டு எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ண்' எனும் மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'டு' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொற்களை மென்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 15

ஆங்கு அதனுக்க ஆகாரம் ஆனாற்போல பாங்கு அறியா

வெண்பா 15 -இல் இரண்டாவது வரியில் ஆங்கு எனும் ஈற்றுக்கும் ,அதே வரியில் பாங்கு எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ங்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'கு' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொற்கள் மென்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 20

அம்மருந்து போல்வாரும் உண்டு

வெண்பா 20 -இல் நான்காவது வரியில் மருந்து எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ந்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது.அதே வரியில் உண்டு எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ண்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'டு' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொற்கள் மென்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 22

எழுதியவா றேகாண் இரங்கு மடநெஞ்சே

வெண்பா 22 -இல் முதல் வரியில் இரங்கு எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து 'ங்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'கு' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் மென்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 25

நஞ்சு உடைமை தான் அறிந்து நாகம் கரந்து உறையும்

அஞ்சாப் புறம் கிடக்கும் நீர்ப் பாம்பு – நெஞ்சில்

வெண்பா 25 -இல் முதல் வரியில் நஞ்சு எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து 'ஞ்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'சு' என்ற உகரம் வருகிறது.அதே வரியில், அறிந்து எனும் ஈற்றுக்கும் கரந்து எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து 'ந்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது.இரண்டாவது வரியில் பாம்பு எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து 'ம்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'பு' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொற்களை மென்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 27

இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண்

வெண்பா 27 -இல் நான்காவது வரியில் இசைந்து எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து 'ந்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் மென்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

வெண்பா : 30

குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து

வெண்பா 30 -இல் மூன்றாவது வரியில் தந்து எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து 'ந்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் மென்றொடர் குற்றியலுகரம் என வகைப்படும்.

குற்றியலுகர வகைகளான இடைத்தொடர் குற்றியலுகரத்து ஏற்ப வெண்பா பாடல் வரிகளை ஆய்வாளர் மூன்றாவதாகப் பகுப்பாய்ந்துள்ளார். ஆய்வாளர் மேற்கொண்ட ஆய்வின்படி, மூதுரையில் இடம்பெற்றுள்ள 30 வெண்பா பாடல் வரிகளிலும் (ய், ர், ல், வ், ழ், ள்) எனும் இடையின மெய்யெழுத்துகளைத் தொடர்ந்து (கு, சு, டு, து, பு, று) என்ற உகரம் காணப்படவில்லை. எனவே,ஆய்வாளர் மூதுரையில் இடம்பெற்றுள்ள 30 வெண்பா பாடல் வரிகளிலும் இடைத்தொடர்

குற்றியலுகர இலக்கணம் இல்லை என்பதனை இவ்வாய்விந் வாயிலாக உணர்த்தியுள்ளார்.

**உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்**

வெண்பா : 3

ஆளில்லா மங்கைக் **கழகு**.

வெண்பா 3 -இல் நான்காவது வரியில் **கழகு** எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து 'ழ' என்ற ழ்+அ என்பதில் 'அ' என்னும் உயிரெழுத்தை அடுத்து 'கு' என்ற உகரம் வந்ததால் அச்சொல்லானது உயிர்த்தொடர் குற்றியலுகரம் ஆயிற்று.

வெண்பா : 4

அட்டாலும் பால் சுவையில் **குன்றா(து)** அளவளாய்

வெண்பா 4 -இல் முதல் வரியில் **குன்றா(து)** எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து 'றா' என்ற ற்+ஆ என்பதில் 'ஆ' என்னும் உயிரெழுத்தை அடுத்து 'து' என்ற உகரம் வந்ததால் அச்சொல்லானது உயிர்த்தொடர் குற்றியலுகரம் ஆயிற்று.

வெண்பா : 6

பிளந்து **இறுவது** அல்லால் பெரும்பாரம் தாங்கின்

வெண்பா 6 -இல் முதல் வரியில் **இருவது** எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து 'வ' என்ற வ்+அ என்பதில் 'அ' என்னும் உயிரெழுத்தை அடுத்து 'து' என்ற உகரம் வந்ததால் அச்சொல்லானது உயிர்த்தொடர் குற்றியலுகரம் ஆயிற்று.

வெண்பா : 8

நல்லாரைக் **காண்பது**வும் நன்றே; நலம் மிக்க

நல்லார் சொல் **கேட்பது**வும் நன்றே - நல்லார்

குணங்கள் **உரைப்பது**வும் நன்றே அவரோடு இணங்கி **இருப்பது**வும் நன்று

வெண்பா 8 -இல் முதல் வரியில் **காண்பது** எனும் ஈற்றுக்கும், இரண்டாவது வரியில், **கேட்பது** எனும் ஈற்றுக்கும் மூன்றாவது வரியில் **உரைப்பது** எனும் ஈற்றுக்கும்,அதே வரியில் **இருப்பது** எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து 'ப' என்ற ப்+அ என்பதில் 'அ' என்னும் உயிரெழுத்தை அடுத்து 'து' என்ற உகரம் வந்ததால் அச்சொற்களானது உயிர்த்தொடர் குற்றியலுகரம் ஆயிற்று.

வெண்பா : 9

தீயாரைக் **காண்பது**வும் தீதே; திரு அற்ற

தீயார் சொல் **கேட்பது**வும் தீதே - தீயார்

குணங்கள் **உரைப்பது**வும் தீதே; அவரோடு இணங்கி **இருப்பது**வும் தீது

வெண்பா 9 -இல் முதல் வரியில் **காண்பது** எனும் ஈற்றுக்கும், இரண்டாவது வரியில், **கேட்பது** எனும் ஈற்றுக்கும் மூன்றாவது வரியில் **உரைப்பது** எனும் ஈற்றுக்கும்,அதே வரியில் **இருப்பது** எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து 'ப' என்ற ப்+அ என்பதில் 'அ' என்னும் உயிரெழுத்தை அடுத்து 'து' என்ற உகரம் வந்ததால் அச்சொற்களானது உயிர்த்தொடர் குற்றியலுகரம் ஆயிற்று.

வெண்பா : 11

பண்டு **முளைப்பது** அரிசியே ஆனாலும்

ஆற்றல் உடையார்க்கும் **ஆகாது** அளவின்றி

வெண்பா 11 -இல் முதல் வரியில் **முளைப்பது** எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து ‘ப’ என்ற ப்+அ என்பதில் ‘அ’ என்னும் உயிரெழுத்தை அடுத்து ‘து’ என்ற உகரம் வந்ததால் அச்சொல்லானது உயிர்த்தொடர் குற்றியலுகரம் ஆயிற்று.மூன்றாவது வரியில் **ஆகாது** எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து ‘கா’ என்ற க்+ஆ என்பதில் ‘ஆ’ என்னும் உயிரெழுத்தை அடுத்து ‘து’ என்ற உகரம் வந்ததால் அச்சொல்லானது உயிர்த்தொடர் குற்றியலுகரம் ஆயிற்று.

வெண்பா : 12

மடல் **பெரிது** தாழை; மகிழ் **இனிது** கந்தம்

மண்ணீரும் **ஆகாது**; அதன் அருகே சிற்றூறல் உண்ணீரும் ஆகிவிடும்

வெண்பா 12 -இல் முதல் வரியில் **பெரிது** எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து ‘ரி’ என்ற ர்+இ என்பதில் ‘இ’ என்னும் உயிரெழுத்தை அடுத்து ‘து’ என்ற உகரம் வந்ததால் அச்சொல்லானது உயிர்த்தொடர் குற்றியலுகரம் ஆயிற்று.அடுத்து அதே வரியில் **இனிது** எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து ‘னி’ என்ற ன்+இ என்பதில் ‘இ’ என்னும் உயிரெழுத்தை அடுத்து ‘து’ என்ற உகரம் வந்ததால் அச்சொல்லானது உயிர்த்தொடர் குற்றியலுகரம் ஆயிற்று.மூன்றாவது வரியில் **ஆகாது** எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து ‘கா’ என்ற க்+ஆ என்பதில் ‘ஆ’ என்னும் உயிரெழுத்தை அடுத்து ‘து’ என்ற உகரம் வந்ததால் அச்சொல்லானது உயிர்த்தொடர் குற்றியலுகரம் ஆயிற்று.

வெண்பா : 19

நாழி **முகவாது** நானாழி – தோழி

வெண்பா 19 -இல் இரண்டாவது வரியில் **முகவாது** எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து ‘வா’ என்ற வ்+ஆ என்பதில் ‘ஆ’ என்னும் உயிரெழுத்தை அடுத்து ‘து’ என்ற உகரம் வந்ததால் அச்சொல்லானது உயிர்த்தொடர் குற்றியலுகரம் ஆயிற்று.

வெண்பா : 21

இல்லாள் அகத்து இருக்க **இல்லாதது** ஒன்று இல்லை

வெண்பா 21 -இல் முதல் வரியில் **இல்லாதது** எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து ‘த’ என்ற த்+அ என்பதில் ‘அ’ என்னும் உயிரெழுத்தை அடுத்து ‘து’ என்ற உகரம் வந்ததால் அச்சொல்லானது உயிர்த்தொடர் குற்றியலுகரம் ஆயிற்று.

வெண்பா : 23

பொற் **பிளவோடு** ஒப்பாரும் போல்வாரே - வில்பிடித்து
சீர் **ஒழுகு** சான்றோர் சினம்

வெண்பா 23 -இல் இரண்டாவது வரியில் **பிளவோடு** எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து வோ’ என்ற வ்+ஓ என்பதில் ‘ஓ’ என்னும் உயிரெழுத்தை அடுத்து ‘டு’ என்ற உகரம் வந்ததால் அச்சொல்லானது உயிர்த்தொடர் குற்றியலுகரம் ஆயிற்று.அடுத்து,நான்காவது வரியில் **ஒழுகு** எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து ‘ழு’ என்ற ழ்+உ என்பதில் ‘உ’ என்னும் உயிரெழுத்தை அடுத்து ‘கு’ என்ற உகரம் வந்ததால் அச்சொல்லானது உயிர்த்தொடர் குற்றியலுகரம் ஆயிற்று.

வெண்பா : 28

சந்தன **மென்குறடு** தான்தேய்ந்த காலத்தும்

வெண்பா 28 -இல் முதல் வரியில் **மென்குறடு** எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து 'ற' என்ற ற்+அ என்பதில் 'அ' என்னும் உயிரெழுத்தை அடுத்து 'டு' என்ற உகரம் வந்ததால் அச்சொல்லானது உயிர்த்தொடர் குற்றியலுகரம் ஆயிற்று.

### ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்

ஆய்வாளர் மேற்கொண்ட ஆய்வின்படி, மூதுரையில் இடம்பெற்றுள்ள 30 வெண்பா பாடல் வரிகளிலும் (ஃ) எனும் ஆயுதெழுத்துகளைத் தொடர்ந்து (கு, சு, டு, து, பு, று) என்ற உகரம் காணப்படவில்லை. எனவே, ஆய்வாளர் மூதுரையில் இடம்பெற்றுள்ள 30 வெண்பா பாடல் வரிகளிலும் ஆயுதத்தொடர் குற்றியலுகர இலக்கணம் இல்லை என்பதனை இவ்வாய்வின் வாயிலாக உணர்த்தியுள்ளார்.

### நெடிற்றொடர்க் குற்றியலுகரம்

ஆய்வாளர் மேற்கொண்ட ஆய்வின்படி, மூதுரையில் இடம்பெற்றுள்ள 30 வெண்பா பாடல் வரிகளிலும் ஒரு வெண்பாவில் அதாவது வெண்பா 29-இல் மட்டுமே நெடிற்றொடர்க் குற்றியலுகர இலக்கணம் காணப்பட்டுள்ளது.

வெண்பா : 29

ஆம் **போது** அவளோடும் ஆகும்; அவள் பிரிந்து

வெண்பா 29 -இல் மூன்றாவது வரியில் **போது** எனும் ஈற்றுக்கும் அயல் எழுத்து 'போ' என்ற தனிநெடில் எழுத்தை அடுத்து 'து' என்ற உகரம் வந்ததால் அச்சொல்லானது நெடிற்றொடர் குற்றியலுகரம் ஆயிற்று.

### முடிவுரை

இந்த ஆய்வின் வழி மூதுரை இடம்பெற்றுள்ள 30 வெண்பா பாடல்களிலும் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாடு சான்றுகளுடன் பகுப்பாய்ந்து குறிப்பிடப்பட்டுள்ளது. மூதுரை இடம்பெற்றுள்ள 30 வெண்பா பாடல்களிலும் குற்றியலுகரப் பயன்பாடு அடையாளங்காணப்பட்டு மக்கள் பயனுறும் பொருண்மையைத் தெளிவாக விளக்கியுள்ளார் என்பது திண்ணம். மக்களுக்குக் கூறவிரும்பும் கருத்துகளை உத்திரவிட்டும், கட்டளையிட்டும் 30 வெண்பா பாடல்களில் அழகாக ஏவியுள்ளார். மக்கள் பின்பற்றுவதற்கான இந்தக் குற்றியலுகர இலக்கணத்தைச் செம்மையாகப் பயன்படுத்தியுள்ளார் என ஆய்வு புலப்படுகிறது.

**துணைநூற்பட்டியல்**

Arivananthan, M. (2004). Itu eeka7 Cuvamu - Irupatâm Nû__âgmil Malçciya Intiyarka7. Kelana Jaya.

Ceiiai Vâcakar Vammam. (1968) Akkarai Ilakkiyam. Chennai

Keerthi, (2011) Neethi Noolkal, Konar achakam, Chennai, India

Mohanadass. (2005). Aṭippaṭai tamiḻ ilakkaṇam [Basic Tamil Grammar]. Kuala Lumpur: University of Malaya.

Sabeetha, S. (2022). Ethical Thoughts emphasized in Moothurai. International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR).

Tamil Virtual Academy. (2001). Tolkāppiyattil col atikāram ['Word' in Tolkappiyam]. Retrieved from http://www.tamilvu.org/

தமிழ் இலக்கணச் சிறப்புகள். Muallim Journal of Social Sciences and Humanities, 5(4), 10-16. Https://doi.org/10.33306/mjssh/155

மலேசிய தமிழ்ப்பள்ளிகளின் தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் பயன்படுத்தப்படும் ஔவையின் செய்யுள் மாணவருக்கு உணர்த்தும் வாழ்க்கை நெறி